**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No. 178/2025**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 1 |
| Name (திரு/திருமதி) | : முனியம்மாள் |
| Father's Name/ Husband's Name | : வேலு |
| Village & Taluk | : செவலாம்பாடி |
| Calling | : விவசாயம் |
| Age | : 62 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.03.2026**

1 முதல் 3 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை :**

1. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் என் உறவினர்கள் ஆவார்கள். பட்டியல் சாட்சி –2 பெரியசாமி எனது மகன் ஆவார். சாட்சி3 பூங்காவனம் எனது மருமகன் ஆவார். கடந்த 2023ம் வருடம் ஒரு நாள் இரவு 08.00 மணியளவில் நானும், எனது மகன் மற்றும் மருகள் ஆகியோர்கள் எங்கள் வீட்டில் இருந்தபோது கும்பலாக வந்த அடையாளம் தெரியாத நபர்கள் வந்து எங்களை ஆபாசமாக பேசி தாக்கிவிட்டனர். எதிரிகள் எங்களை தாக்கவில்லை. அதில் எங்களுக்கு காயம் ஏற்பட்டது. காயமடைந்த நாங்கள் அனைவரும் திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றோம். இது சம்பந்தமாக நான் அவலூர்பேட்டை காவல் நிலையத்தில் புகார் மனு அளித்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கைரேகை என்னுடையதுதான் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது. மேற்படி புகார் வாக்குமூலத்தில் உள்ள கைரேகை **அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** காவலர்கள் என்னை விசாரித்தனர்.**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி சாட்சியை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது).**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

1. ஆஜர் எதிரிகள் எனது நெருங்கிய உறவினர்கள் என்றால் சரிதான். கடந்த 29.06.2023 ம் தேதி இரவு 8.00 மணிக்கு நானும், எனது மகன் மற்றும் மருமகள் ஆகியோர்கள் என் வீட்டில் இருந்தோம் என்றால் சரிதான். அப்போது முன் விரோதத்தில் ஆஜர் எதிரிகள் எங்களை தகாத வார்த்தையால் திட்டி, இரும்பு ராடாலும், தடியாலும் தாக்கி கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றால் இல்லை. நானும், எதிரிகளும் தற்போது சமாதானமாகிவிட்டபடியால் அவர்களை காப்பற்ற வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை என குறிப்பிடப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

SD/–B.VIDHYA,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No. 178/2025**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 2 |
| Name (திரு/திருமதி) | : பெரியசாமி |
| Father's Name/ Husband's Name | : வேலு |
| Village & Taluk | : விநாயகபுரம் |
| Calling | : விவசாயம் |
| Age | : 47 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.03.2026**

1 முதல் 3 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை :**

1. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் என் உறவினர்கள் ஆவார்கள். அ .சா.1 முனியம்மாள் எனது அம்மா ஆவார். சாட்சி3 பூங்காவனம் எனது மனைவி ஆவார். கடந்த 2023 ம் வருடம் ஒரு நாள் இரவு 08.00 மணியளவில் நானும், எனது அம்மா மற்றும் மனைவி ஆகியோர்கள் எங்கள் வீட்டில் இருந்தபோது கும்பலாக வந்த அடையாளம் தெரியாத நபர்கள் வந்து எங்களை ஆபாசமாக பேசி தாக்கிவிட்டனர். எதிரிகள் எங்களை தாக்கவில்லை. அதில் எங்களுக்கு காயம் ஏற்பட்டது. காயமடைந்த நாங்கள் அனைவரும் திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றோம். காவலர்கள் என்னை விசாரித்தனர்.**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி சாட்சியை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது).**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

1. ஆஜர் எதிரிகள் எனது நெருங்கிய உறவினர்கள் என்றால் சரிதான். கடந்த 29.06.2023 ம் தேதி இரவு 8.00 மணிக்கு நானும், எனது அம்மா மற்றும் எனது மனைவி ஆகியோர்கள் என் வீட்டில் இருந்தோம் என்றால் சரிதான். அப்போது முன் விரோதத்தில் ஆஜர் எதிரிகள் எங்களை தகாத வார்த்தையால் திட்டி, இரும்பு ராடாலும், தடியாலும் தாக்கி கொலை மிரட்டல் விடுத்தார்கள்

என்றால் இல்லை. நானும், எதிரிகளும் தற்போது சமாதானமாகிவிட்டபடியால் அவர்களை காப்பற்ற வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை என குறிப்பிடப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

SD/–B.VIDHYA,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No. 178/2025**

| | | |
|---|---|---|
| Deposition of Witness for PW | : | 3 |
| Name (திரு/திருமதி) | : | தணிகை மலை |
| Father's Name/ Husband's Name | : | வேலு |
| Village & Taluk | : | விநாயகபுரம் |
| Calling | : | விவசாயம் |
| Age | : | 48 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.03.2026**

1 முதல் 3 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை :**

1. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் என் உறவினர்கள் ஆவார்கள். அ.சா.1, அ.சா.2 மற்றும் சாட்சி-3 ஆகியோர்கள் எனது உறவினர்கள். இவ்வழக்கு தொடர்பாக எனக்கு எதுவும் தெரியாது. நான் எந்த சம்பவத்தையும் நேரில் பார்க்கவில்லை. காவலர்கள் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

1. ஆஜர் எதிரிகள் எனது நெருங்கிய உறவினர்கள் என்றால் சரிதான். கடந்த 29.06.2023 ம் தேதி இரவு 8.00 மணிக்கு அ.சா.1, அ.சா.2 மற்றும் பட்டியல் சாட்சி-3 ஆகியோர்கள் அவர்களது வீட்டில் இருந்தார்ள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அப்போது முன் விரோதத்தில் ஆஜர் எதிரிகள் அவர்களை தகாத வார்த்தையால் திட்டி, இரும்பு ராடாலும், தடியாலும் தாக்கி கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றால் தெரியாது. மேற்படி சம்பவத்தை நேரில் பார்த்துவிட்டு அதனை காவலர்கள் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளை காப்பற்ற வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை என குறிப்பிடப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

SD/-B.VIDHYA,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.